**RETETII&IIAM/2026**

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி-II (ம) IIA பணிகள்) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 15.03.2026 பி.ப.

Do not use this area

TNPSC - SPECIMEN

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி-II (ம) IIA பணிகள்) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 15.03.2026 பி.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

TNPSC - SPECIMEN
Do not use this area

# தாள் – I

# தமிழ்மொழி தகுதித் தேர்வு

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

TNPSC - SPECIMEN

1. தாள்-I-இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. (i) தேர்வர் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும். அடித்த பகுதிகளில் கையொப்பம் இடக்கூடாது.

4. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

5. தேர்வர் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

6. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

7. தேர்வர் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

8. தேர்வர் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் 'அ ஆ இ' அல்லது 'எக்ஸ் ஒய் இசட்' போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

9. <u>**கீழ்க்கண்ட தவறுகள் கண்டறியப்பட்டால், விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**</u>

   <u>**The Answer Booklets will be invalidated if the following errors are found :**</u>

   (i) வினா விடைத்தாள் தொகுப்பில் கருமை நிற மை பேனாக்களைத் தவிர மற்ற நிற மை பேனாக்களை (Whitener, Sketch pens, Pencil, வண்ணப் பென்சில்கள், வண்ண மைப்பேனா, Crayons, etc.,) உபயோகப்படுத்தினால்.

   (ii) தேர்வர், தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலாவது எழுதினால்.

   (iii) வினா விடைத்தாள் தொகுப்பில் எந்த ஒரு இடத்திலும் தொடர்பற்ற வகையில் பெயர் மற்றும் விவரங்களை மற்ற இடங்களில் எழுதுதல், மதக் குறியீட்டினை எழுதுதல் தேர்வரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம் அல்லது முகவரி ஆகிய பொருத்தமற்ற குறியீடுகளை இடுதல் (அ) எழுதுதல்.

   (iv) தேர்வர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைத்தாள் தொகுப்பில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.

   (v) தேர்வர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல்.

   (vi) குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, தேர்வர்கள் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. எனினும் மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம். மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது.

   (vii) பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது.

   (viii) வினா விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீட்டினை சேதப்படுத்துதல்.

   (ix) வினா விடைத்தாள் தொகுப்பின் முதல் பக்கத்தில் இதற்கென உள்ள இரண்டு இடங்களிலும் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்.

---

TNPSC - SPECIMEN

## அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i)** **கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 1 | கோடைக்காலம்<br>இப்பருவத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் இந்திய தீபகற்பத்தின் மீது விழுகிறது. எனவே வெப்பநிலை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிகரிக்கிறது. கோடைக்காலத்தின் முற்பகுதியில் நாடு முழுவதும் வெப்பமான வறண்ட வானிலை நிலவுகிறது. கோடைக்காலத்தின் மத்தியிலும், இறுதியிலும் நிலப்பகுதி இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழையின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.<br>இப்பருவத்தில் இந்தியா முழுவதும் வெப்பம் அதிகரிக்கின்றது. ஏப்ரல் மாதத்தில் தென் இந்திய உட்பகுதிகளில் தின சராசரி வெப்பநிலை 30ºC – 35ºC ஆகப் பதிவாகிறது. மத்திய இந்திய நிலப்பகுதியின் பல பகுதிகளில் பகல் நேர உச்ச வெப்பநிலை 40ºC ஆக உள்ளது.<br>வளி மண்டல அழுத்த நிலையின் வேறுபாட்டால் அரபிக்கடல் மற்றும் வங்கக்கடல் பகுதிகளில் காற்றானது தென் மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி வீசுகிறது. இக்காற்றுகள் மே மாதத்தில் மேற்கு கடற்கரை பகுதிகளுக்கு முன் பருவகால மழையைத் தருகின்றன. “மாஞ்சாரல்” (Mango Shower) என்ற இடியுடன் கூடிய மழையானது கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் “மாங்காய்கள்” விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது. |

## அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii)** **கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழி பெயர்க்கவும் :**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 2 | Heavy electrical industries manufacture equipment used for power generation, transmission and utilization. Turbines for steam and hydro power plants Boilers for thermal power plants, generators, transformers, switch gears etc. are the chief products of this industry. The most important company in the field of heavy electrical is Bharath Heavy Electricals Ltd. (BHEL) it has its plants at Haridwar, Bhopal, Hyderabad, Jammu, Bengaluru, Jhansi and Tiruchirappalli. This industry covers a wide range of products including television sets, transistor sets, telephone exchanger, cellular, telegram, computers and vivid equipments for post and railway difference and meteorological department.<br>Bengaluru is the largest producer of electronic good in India hence it is called as the “Electronic Capital of India”. The other major producers of electronic goods centers area Hyderabad, Delhi, Mumbai, Chennai, Kolkatta, Kanpur, Pune, Lucknow, Jaipur and Coimbatore.<br>India is home to some of the finest software companies in the world. The software companies in India are reputed across the globe for their efficient IT and business related solutions. The Indian software industry has bought about a tremendous success for the emerging economy. |

TNPSC - SPECIMEN

## அலகு — 2

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 3 | பொருளாதார மேம்பாடு என்பது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியை புதிய தொழில் நுட்பங்களோடு முறையோடு ஏற்றுக் கொள்வதாகும். பொருளாதார மேம்பாடு என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், நிலையான நாட்டின் வளர்ச்சியையும் குறிக்கிறது.<br>நிகரநாட்டு உற்பத்தி, தனி நபர் வருமானம், வாங்கும் திறன் சமநிலை, மனித வள மேம்பாட்டுக் குறியீடு ஆகியவை பொருளாதார முன்னேற்றத்தின் முதன்மையான குறியீடுகளாகும். நிகர நாட்டு உற்பத்தி தேசிய உற்பத்தியின் உண்மையான அளவாக கருதப்படுகிறது. இது நாட்டு வருமானம் என்றும் அறியப்படுகிறது. தனி நபர் வருமான உயர்வு எப்போதும் மொத்த உண்மையான உற்பத்தியின் உயர்வு என்று பொருள்படும். எனவே தனிநபர் வருமானமே நாட்டின் மேட்பாட்டை அளவிடும் சிறந்த குறியீடு ஆகும்.<br>நாடுகளின் மேம்பாட்டை அளவிடுவதற்கு வருமானம் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதிக வருமானம் கொண்ட நாடுகள் குறைவான வருமானத்தைக் கொண்ட நாட்டை விட அதிக வளர்ச்சியடைந்த நாடாக கருதப்படுகின்றன. எனவே நாட்டு வருமானமே பொருளாதார மேம்பாட்டின் குறியீடாகக் கருதப்படுகிறது. |

## அலகு — 3

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

**(5 × 2 = 10)**

| Q.No. | |
|---|---|
| 4 | <u>பொருள் உணர்திறன் :</u><br>பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக :<br>கொல்லையிலே வாழை பலா<br>மாங்கனிகள் குலுங்கும்! நீள்<br>கரும்ப ழைக்கும்<br>நெல்லரியோ வந்த கதிர்<br>நிறங்கண்டு தலை தாழ்த்தும்!<br>ஊரோ நத்துக்<br>கல்லருவி முழவார்க்கும்! (முழவார்க்கும்)<br>காடெல்லாம் பூச்சிரிக்கும்!<br>குயில்கள் பாடும்! |
| வினாக்கள் : | |
| 1. | பாடலிலுள்ள முக்கனிகளின் பெயர்களைக் குறிப்பிடுக. |
| 2. | அழைப்பது எது ? |
| 3. | தலை தாழ்த்துவது எது ? |
| 4. | காடெல்லாம் சிரிப்பது எது ? |
| 5. | பாடுவது எது ? |



TNPSC - SPECIMEN

## அலகு — 4

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | சுற்றுச்சூழல் – மனிதனும் சுற்றுச்சூழலும் – சுற்றுச்சூழலின் வகைகள் – இயற்கை சுற்றுச்சூழல் – மனித சுற்றுச்சூழல் – மனிதனால் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் – மக்கள் தொகை வளர்ச்சி – சுற்றுச்சூழல் பிரச்சினைகள் – வளம் குன்றா சுற்றுச்சூழல் வளர்ச்சி. |

## அலகு — 5

*குறிப்பு :* i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.

ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 6 | (அ) | 'அன்புடைமை' என்னும் அதிகாரத்தின் வழி திருக்குறள் ஒரு மதச் சார்பற்ற இலக்கியம் என்பதைப் புலப்படுத்துக. |
| | (ஆ) | "ஊக்கம் உயர்வைத் தரும்" என்பதை வள்ளுவர் வழிநின்று விவரிக்க. |
| | (இ) | 'புகழ்' பெற்று வாழும் வழிமுறைகளை வள்ளுவர் குறட்பாக்கள் வழி எடுத்துரைக்க. |
| | (ஈ) | வாய்மையே நம்மை சிறப்புடன் வாழ வைக்கும் என்பதை வள்ளுவர் வழிநின்று விளக்குக. |
| | (உ) | ஆசைகளைக் கடந்து வாழ்வதே சிறந்தது என்பதை வள்ளுவரின் 'அவாவறுத்தல்' எனும் அதிகாரம் கொண்டு விளக்குக. |

## அலகு — 6

*குறிப்பு :* i) கடிதம் வரைதல்

ii) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | திருக்குறளில் நூறு குறள்களை தமிழக உயர்நிலைப் பள்ளிகளில் நன்னெறிக் கல்விப் பாடத்தில் சேர்த்தல் தொடர்பாகப் பள்ளிக் கல்வித்துறை இயக்குநருக்கு அறிக்கை ஒன்றை அனுப்புக. |
| | (ஆ) | அரசுப் பள்ளியில் நடைபெற்ற "மரமும் மனிதனும்" தலைப்பிலமைந்த நிகழ்வுகள் குறித்து மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிக்கை ஒன்றினைத் தயார் செய்க. |
| | (இ) | தமிழர்த் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு இலவச அரிசி, சர்க்கரை வழங்குதல், குடும்பம் ஒன்றிற்கு ரூ. 2,000/- வழங்க வேண்டி அரசாணை வெளியிடல். |

TNPSC - SPECIMEN

## அலகு — 7

*குறிப்பு :*

i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

iv) ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| | |
|---|---|
| Q.No. 8 | கீழ்க்காணும் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக. |
| | (1) பழக்க வழக்கம் |
| | (2) ஊணுறக்கமின்றி |
| | (3) தொன்று தொட்டு |
| | (4) மேடும் பள்ளமும் |
| Q.No. 9 | பின்வரும் இணைச்சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க. |
| | (1) தாயாக தந்தையாக |
| | (2) உறுதி மகிழ்ச்சி |
| | (3) மடை, வெள்ளம் |
| | (4) அண்ணன் தங்கை |
| Q.No. 10 | பிரித்தெழுதுக. |
| | (1) அதற்கு |
| | (2) தீயெரி |
| | (3) மலைந்து |
| | (4) அறியேன் |

TNPSC - SPECIMEN

| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.** |
|---|---|
| | (1) அங்கே தெரிவது மலை. |
| | (2) அக்காலத்தில் நிழற்படம் இருந்தது. |
| | (3) மாலை நேரம் மல்லிகைப் பூ மலரும். |
| | (4) நாளைக் காலை செய்தித்தாள் வரும். |

| Q.No. 12 | **பிழை நீக்கி எழுதுக :** |
|---|---|
| | (1) சிற்றிலக்கிய வகைகளுல் ஒன்று கிர்த்தணை. |
| | (2) இலக்கியம் வால்வியலைப் பிரதிபலிக்கும் கன்னாடி. |
| | (3) மானவர் விரும்பி படிக்கும் பாடங்களுள் ஒன்று கனிணி அறிவியல். |
| | (4) அரம் செய விறும்பு. |

TNPSC - SPECIMEN